**நாவலப்பிடிய நகர சபை - 2020**

------------------------------------------------------------ -

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாவலப்பிடிய நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாவலப்பிடிய நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகை தரபபினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான

உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 வகையான கலப்பு வைப்பு மீதிகளின் பெறுமதி ரூபா 358,782 தொகை மற்றும் 03 கேள்வி வைப்புக்களின் பெறுமதி ரூபா 579,000 தொகை என்பன நிதி கூற்றக்களில் பொது வைப்பு மீதிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக விடய உத்தியோகத்தரால் கணக்கீடு செய்ய முடியவில்லை என்பதாக. | அடுத்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 801,209 பெறுமதியான 13 கடன்கொடுத்தோர் மீதிகள் கணக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் கணக்குகளில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன் | அடுத்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக |
| (இ) | நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 4,388,184 பெறுமதியான 09 வகை சொத்துகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பரீட்சித்து சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | அடுத்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக |
| (ஈ) | சபைக்கு எதிராக தொடரப்பட்ட 05 வழக்குகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அதன்படி எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்வதாக. | அடுத்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சம்பளம் மீள்நிரப்பல் தொடர்பாக கிடைக்கப் பெற்ற ரூபா 68,042,103 தொகையான வருமானம் உரிய வேலைத் திட்டங்களின் கீழ் வேறு வேறாக கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்தும் பொது நிர்வாக வேலைத் திட்டத்தின் கீழ் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் வேறு வேறாக வேலைத்திட்டங்களின் கீழ் கணக்கீடு செய்ய திட்டமிட்டுள்ளதாக. | அடுத்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன்பட்டோர் மீதி ரூபா 17,291,938 கூட்டுத்தொகையான கடன் மீதியில் உள்ளடக்கப்பட்ட வாகன வாடகை அட்டவணைப்படி ரூபா 3,487,332 ஆக இருந்த போதிலும் அது ரூபா 3,497,732 என கணக்குளில் காட்டப்பட்டிருந்ததனால் ரூபா 10,400 தொகை வேறுபாடொன்று காணப்பட்டது. | சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | அடுத்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருந்த ரூபா 1,899,358 ஆன 05 வகைக்கான மீதிகளின் பெறுமதியினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அட்டவணைகள் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பரீட்சித்து எதிர்காலத்தில் முன்வைப்பதாக. | கணக்காய்விற்கு தேவையான தகவல் வழங்கப்பட வேண்டும். |

**1.7. இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிச் சட்டம் | 09 சந்தர்ப்பங்களில் அறவிடப்பட்ட ரூபா 11,525 பெறுமதியான முத்திரைக் கட்டணம் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அதன்படி எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்வதாக. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை.

-----------------------------

2016 மார்ச் 17 ஆம் திகதிய 2016/03 ஆம் இலக்க சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) 03 ஆம் பந்தி | சுற்றறிக்கைகளுக்கு அமைய சபைக்குரிய 04 கடைகளின் வாடகை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீடொன்றை பெற்றுத்தருமாறு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தொடர்ச்சியாக தெரியப்படுத்தியிருந்தும் மதிப்பீட்டினை இதுவரையிலும் பெற்றுத் தரவில்லை. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 51 ஆம் பந்தி | 03 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,338,181 ஒரே தடவையான பணத் தொகையை அறவீடு செய்ய சுற்றறிக்கைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 50 ஆம் இலக்க கடை யிலிருந்து நிலுவைத் தொகையில் ஒருபகுதியை இதுவரை அறவீடு செய்துள்ளதாகவும் , காணப்படும் கொரோனா தொற்றுக் காரணமாக எஞ்சிய தொகையை செலுத்துவதற்கு மேலதிக காலம் கோரப்பட்டுள்ளது டன் அது தொடர்பில் பொது சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது . | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,536,501 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,259,441 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

**(அ) வீதவரியும் வரியும்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய வீத வரி நிலுவையாக ரூபா 17,906,692 தொகை காணப்பட்டதுடன், அத்தொகையில் உள்ளடங்கும் அரச நிறுவனங்களிலிருந்து பெறவேண்டிய நிலுவை வரி ரூபா 906,697 தொகையை அறவீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு எதிர்வரும் எடுத்துள்ளதாக. | தாமதமின்றி நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |

**(ஆ) கடை வாடகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை கடை வாடகை ரூபா 3,130,748 மீதித் தொகையில் வருடத்தினுள் மொத்தமாக ரூபா 71,240 அல்லது 2 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் செயற்பாட்டுத் திட்டமொன்று தயாரித்து நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக. | தாமதமின்றி நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |

**(இ) ஏனைய வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நீர் பட்டியல் கட்டண நிலுவை ரூபா 875,892 தொகையில் வருடத்தினுள் ரூபா 132,842 தொகை அல்லது 15 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்ததுடன் வருட இறுதியில் நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 885,275 தொகையாக காணப்பட்டது. | ரூபா 37,921 ஐ அறவிடப்பட முடிந்ததாகவும் அறவிட முடியாத தொகை தெடர்பில் விடயப்பொறுப்பான அமைச்சரின் அனுமதியுடன் பதிவிழக்க திட்டமிட்டுள்ள தாகவும், தற்போது நடைமுறையிலுள்ள நீர்ச் சேவை தொடர்பில் நிலுவைத் தொகையை செலுத்தாதுவிடின் துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. | தாமதமின்றி நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட நிலுவை காணிக் குத்தகை வருமானம் ரூபா 605,170 தொகையாவதுடன், அவற்றில் 01 முதல் 03 வருடங்களுக்குற்பட்ட நிலுவை ரூபா 185,239 தொகையும், 03 வருடங்களை விஞ்சிய நிலுவை ரூபா 232,455 ஆகவும் இருந்தது. | எதிர்காலத்தில் செயற்படுத்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக. | தாமதமின்றி நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (iii) | வருட ஆரம்பத்தில் மோட்டார் வாகன நிலுவையாக வருட ஆரம்பத்தில் ரூபா 2,568,399 தொகையில் மீளாய்வாண்டினுள் ரூபா 375,617 தொகை அதாவது நிலுவையில் 15 சதவீதம மாத்திரமே அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிட வேண்டிய நிலுவை ரூபா 1,508,020 ஆக இருந்தது | எதிர்காலத்தில் செயற்படுத்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக. | தாமதமின்றி நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (iv) | சுபிரி வியாபார கட்டிடத் தொகுதியில் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் பெறவேண்டிய நிலுவை மீதி ரூபா 35,038,854 தொகையில் வருடத்தினுள் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 43,784 தொகை அல்லது 0.12% சதவீதமாக இருந்ததுடன் வருட இறுதியில் கடை வாடகை நிலுவை ரூபா 54,409,970 தொகையாகும். | புதிய கடை வாடகை திருத்தத்திற்கு அமைய வழக்கொன்று விசாரிக்கப்படுவதுடன், அந்த வழக்கு முடியும் வரையில் கடை வாடகை மற்றும் நிலுவைத் தொகை அறவீடு செய்வதில் இடர்பாடுகள் காணப்படுவதாக. | தாமதமின்றி நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் மீளாய்வாண்டு இறுதியில் செலுத்தப்பட்ட வழக்குக் கட்டணம் ரூபா 1,872,000 தொகையில் ரூபா 1,847,700 தொகையானது குற்றம் சாட்டப்பட்டவர் என்ற வகையில் ஏற்பட்ட செலவாகும். | தொடரப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பில் வழக்கறிஞரின் உதவி அவசியமாகும். அதனால் இந்த வழக்குச் செலவுகளை ஏற்க வேண்டியுள்ளதாக. | நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படாத வகையில் சட்ட விதிகள், பிரமாணங்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ஏனைய வருமான கடன்பட்டோர் மீதி ரூபா 17,291,938 தொகையினுள் இரண்டு தொடக்கம் 10 வருட காலங்களுக்கு இடையிலான ரூபா 7,256,995 தொகை உள்ளடங்கியிருந்தது. | 2020 ஆம் ஆண்டு காணப்பட்ட கொவிட் தொற்றுக் காரணமாக வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கமுடியாமல் போனது | தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் கைத்தொழில் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 5,578,120 ஆக காணப்பட்டதுடன் அவற்றுள் 03 வருடங்களை விஞ்சிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 3,097,537 ஆகும். | 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 2,366,247 தொகை கொடுப்பணவு செய்யப்பட்டு, ரூபா 1,073,458 தொகை செலுத்த வேண்டியிருந்ததாக. இறுதி பகுதியாக ரூபா 2,232,523 கொடுப்பணவு செய்யப்பட்டது. | தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |